தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B, மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



SRL Jewellery
MJF.Lion.SRL. VENUGOPAL @ KANNAN
87, Main Road, Sankarankovil
Cell : 9150661745



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 254 | 08.03.2026 | SUNDAY | MAASI : 24 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 254 | 08.03.2026 | ஞாயிற்றுக்கிழமை | மாசி : 24 | விலை : ரூ.5/-


## தற்போதைய அரசியல் சூழலில்

# "எந்தத் தொகுதியில் போட்டி?"

## உதயநிதி ஸ்டாலின் பதில்



தூத்துக்குடி: மார்ச்.8-

"கடந்த தேர்தலில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டேன். தற்போது திமுக தலைவர் என்ன முடிவு எடுக்கிறாரோ, அந்த தொகுதியில் போட்டியிடுவேன்" என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "தேர்தலை முன்னிட்டு கட்சி நிர்வாகிகள் சந்திப்பை நடத்தி முடித்துள்ளோம். நாளை திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாநாடு நடைபெற உள்ளது. திமுக தலைவர் அறிவித்த பின்னர் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குவோம். மக்களை தொடர்ந்து சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் முதல்வர் மக்களை சந்தித்து வருகிறார். அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து களத்தில் தான் இருக்கிறோம். 99 சதவீதம் வாக்குறுதிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றி உள்ளார். பள்ளிகளில் காலை உணவு திட்டம் உட்பட தேர்தல் அறிக்கையில் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளோம்.

திமுக ஆட்சி மீண்டும் அமைந்ததும், மகளிர் உரிமைத் தொகையை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி கொடுக்கப்படும் என்று முதல்வர் கூறியுள்ளார். கடந்த தேர்தலில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டேன். தற்போது திமுக தலைவர் என்ன முடிவு எடுக்கிறாரோ அந்த தொகுதியில் போட்டியிடுவேன்" என்றார்.



## ஏழைகளின் வீட்டு விசேஷங்களுக்கு இனி கவலையில்லை!

### சமுதாயக்கூடம் திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி

திண்டுக்கல், மார்ச்.8-

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் சில்வார்பட்டி ஊராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தின் திறப்பு விழா கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குத்துவிளக்கேற்றி, சமுதாயக்கூடத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் பூமி பூஜை செய்யப்பட்டு தொடங்கப்பட்ட இந்தப் பணிகள், இன்று பயன்பாட்டிற்கு வந்துள்ளன. விழாவில் மாவட்ட திட்ட இயக்குநர் செள. கங்காதரணி தலைமை தாங்கினார். அமைச்சர் பேசுகையில், "கிராமப்புற ஏழை எளிய மக்கள் தங்களது சுப நிகழ்ச்சிகளை குறைந்த செலவில் நடத்த ஏதுவாக, மாநிலம் முழுவதும் சமுதாயக்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திராவிட மாடல் ஆட்சியில், மக்களைத் தேடிச் சென்று குறைகளைக் கேட்டுத் தீர்க்கும் பொற்கால ஆட்சி நடைபெற்று வருகிறது" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.

குடிநீர் உள்ளிட்ட இப்பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மக்களின் ஒவ்வொரு நியாயமான கோரிக்கைகளும் உடனுக்குடன் நிறைவேற்றப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

விழாவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், மலரவன், அமைச்சரின் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பழனி தண்டாயுதபாணி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் கொம்பன் என்ற பாலசுப்ரமணி, ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், உட்பட திமுக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ஊராட்சி செயலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## ராதாபுரம் களத்தில் அனல் பறக்கும் அரசியல்

# மீண்டும் சுயேட்சையாகக் களமிறங்குவாரா சபாநாயகர்?

### சீட் யாருக்கு? மாவட்ட செயலாளரா? சபாநாயகரா?

ராதாபுரம், மார்ச்.8-

சபாநாயகர் அப்பாவு அவர்களின் நீண்டகால செல்வாக்கு மற்றும் தொகுதியில் அவருக்கு இருக்கும் "தாமிரபரணி நாயகன்" என்ற பிம்பம் ஒருபுறம் இருக்க, திமுகவின் உள்ளூர் அதிகார மையங்களுக்கு இடையிலான போட்டி ராதாபுரம் அரசியலை மிகுந்த பரபரப்புக்குள்ளாக்கியுள்ளது.

அரசியல் சதுரங்கத்தை கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்:


1. சபாநாயகர் அப்பாவு: அந்தஸ்து ஸ்ஃ சவால்

அப்பாவு அவர்கள் சபாநாயகர் என்ற மிக உயரிய பொறுப்பில் இருந்தாலும், உள்ளூர் அரசியலில் அவருக்குப் பலத்த போட்டி நிலவுகிறது.

பலங்கள்: தொகுதி மக்களின் நாடித்துடிப்பை அறிந்தவர், ஸ்மார்ட் வகுப்பறைகள், வெள்ள நீர் கால்வாய் திட்டம் போன்ற பணிகள்.

சவால்கள்: சமூக வலைதளங்களில் அவர் மீது சுமத்தப்படும் விமர்சனங்கள் மற்றும் வாரிசு அரசியல் (மகன் அலெக்ஸ்) குறித்த விவாதங்கள்.

சுயேட்சை வாய்ப்பு: அவர் முன்னரே சுயேட்சையாக வெற்றி பெற்றவர் என்பதால், ஒருவேளை கட்சி சீட் மறுத்தால் அதே வியூகத்தை கையில் எடுப்பாரோ என்ற அச்சம் அல்லது எதிர்பார்ப்பு திமுக தலைமைக்கும் இருக்கலாம்.





2. கிரகாம்பெல் (மாவட்ட செயலாளர்): மாவட்ட செயலாளர் என்ற அதிகாரமும், கட்சி கட்டமைப்பில் அவருக்கு இருக்கும் பிடிப்பும் அவருக்குப் பலம் சேர்க்கிறது. "இவரே வேட்பாளர்" என தொண்டர்கள் பேசுவது அவருக்குச் சாதகமான அம்சம்.

3. வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் (மாவட்ட பஞ்சாயத்து தலைவர்): அடித்தட்டு மக்களுடன் நேரடித் தொடர்பு மற்றும் சிரித்த முகத்துடன் உதவிகளைச் செய்யும் அணுகுமுறை, அவரை ஒரு 'மக்களின் வேட்பாளராக' முன்னிறுத்துகிறது.

4, 5. ஏ.ஆர். ரகுமான் - லயன்ஸ் கிளப் முன்னாள் ஆளுநர் சுயம்பு ராஜன்: இவர்கள் தங்கள் சமூகப் பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் மூலம் தொகுதியின் கவனத்தை ஈர்த்து, 'கடைசி நேரத்தில்' வாய்ப்பைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

திமுக தலைமைக்கு இப்போது இரண்டு முக்கிய சவால்கள் உள்ளன:

வெற்றி வாய்ப்பு (Winability): மீண்டும் அப்பாவுக்கே வாய்ப்பு கொடுத்தால், மாவட்ட அளவிலான உட்கட்சிப் பூசல்கள் வாக்குகளைச் சிதறடிக்காமல் இருக்குமா? ஒருவேளை புதியவருக்கு (எ.கா: கிரகாம்பெல்) வாய்ப்பு அளித்தால், அப்பாவு அவர்களின் ஆதரவாளர்கள் அதை எப்படி எடுத்துக்கொள்வார்கள்? ஒருவேளை புதியவருக்கோ இளைஞருக்கோ இந்த வாய்ப்பை கொடுத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் புது ரத்தம் பாய்ச்சப்படும் என்றும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு அரசியல் அலசல்:

சபாநாயகர் அப்பாவு போன்ற சீனியர்கள் பொதுவாகத் தலைமையுடன் நெருக்கமாக இருப்பார்கள். இருப்பினும், தற்போதைய சூழலில் திமுக தலைமை 'கட்சி கட்டுப்பாடு' மற்றும் 'வெற்றி வாய்ப்பு' ஆகிய இரண்டையும் சமநிலைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. வாரிசு அரசியல் குறித்த விவாதங்கள் தற்போதைய சூழலில் கட்சிக்குச் சங்கடத்தை ஏற்படுத்தலாம் என்பதால், வேட்பாளர் தேர்விலேயே தலைமை மிகவும் கவனமாக இருக்கும்.

நிச்சயமாக, 2026 தேர்தல் களம் ராதாபுரத்தில் பல முனைகளில் அனல் பறக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த பட்டியலும், அவர்களது நகர்வுகளும் உள்ளூர் அரசியலை எந்த அளவிற்கு மாற்றும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 3 பேருக்கு சாகும் வரை சிறை தண்டனை

கோவை: மார்ச்.8-

கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைதான மூவருக்கும் சாகும் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கோவை பீளமேடு விமான நிலையம் அருகே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2ம் தேதி இரவு, கோவையைச் சேர்ந்த கல்லூரி மாணவி, ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 3 நபர்கள், ஆண் நண்பரை தாக்கிவிட்டு, கல்லூரி மாணவியை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக கருப்பசாமி, அவருடைய தம்பி காளீஸ்வரன் மற்றும் தவசி ஆகிய 3 பேரை மறுநாள் போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் ப்டித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை, கோவை அனைத்து மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக முதல் கட்டமாக 50 பக்கமும், 2வது கட்டமாக 220 பக்கமும் என மொத்தம் 270 பக்க குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி சுந்தர்ராஜ் முன்னிலையில் நடந்து வரும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவி, அவருடைய ஆண் நண்பர், உறவினர்கள், விசாரணை நடத்திய அதிகாரிகள் என 112 சாட்சிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டனர். 72 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

சென்னையில் உள்ள தடயவியல் மற்றும் டி.என்.ஏ. பரிசோதனை அதிகாரிகள் காணொலி காட்சி மூலம் சாட்சியம் அளித்தனர். குற்றச் சம்பவம் நடந்து கடந்த 4 மாதங்களாக துரித விசாரணை நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் குற்றச்சாட்டு குறித்து நீதிபதி சுந்தர்ராஜ் கேள்வி கேட்டார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் பி.ஜிஷாவும் குற்றச்சாட்டுகள் குறித்து வாதிட்டார். இதைத் தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர் ஒரு மணி நேரம் ஆஜராகி வாதாடினார். அவரது வாதத்துக்கு அரசு தரப்பு வழக்கறிஞர் பதில் வாதம் செய்தார்.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கின் விசாரணை கடந்த மாதம் முடிந்தது. இதையடுத்து, இந்த வழக்கில் மார்ச் 7ம் தேதி தீர்ப்பு கூறப்படும் என்று நீதிபதி சுந்தர்ராஜன் அறிவித்தார்.

அதன்படி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மகளிர் நீதிமன்றத்துக்கு குற்றச்சாட்டுக்குள்ள என மூவரும் பலத்த போலீஸ் பாதுகாப்பு அளித்துவரப்பட்டு இன்று (மார்ச் 7) ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த மூவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிபடுத்திய நீதிபதி சுந்தரராஜன், மூவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தார்.

## அரசு பேருந்து ஓட்டுநர், நடத்துநர்களை வேறு பணிகளுக்கு அனுப்பக் கூடாது

### போக்குவரத்து கழகங்களுக்கு ஐகோர்ட் உத்தரவு

மதுரை: மார்ச்.8-

அரசு போக்குவரத்து கழகத்தில் ஆளும் கட்சி தொழிற்சங்க நிர்வாகிகள் மாற்றுப்பணி என்ற பெயரில் வேலைக்குச் செல்லாமல் சம்பளம் பெறும் விவகாரத்தில் ஓட்டுநர், நடத்துநர்களை வேறு பணிகளுக்கு அனுப்பக் கூடாது என உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது.

அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கனகசுந்தர் உயர் நீதிமன்றத்தில் 2019ல் தாக்கல் செய்த மனுவில், அரசு போக்குவரத்துக் கழக மதுரை மண்டலத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான ஓட்டுநர், நடத்துநர்கள் தங்கள் அசல் பணியைச் செய்யாமல் நிர்வாகப் பிரிவில் பணியாற்றி வருகின்றனர்.

இதனால் பேருந்துகளை இயக்க போதுமான எண்ணிக்கையில் ஓட்டுநர், நடத்துநர்கள் இல்லாமல் இருப்பதால் பேருந்து இயக்கம் பாதிக்கப்படுதாகவும், ஓட்டுநர், நடத்துநர் பற்றாக் குறையை போக்க ஒப்பந்த அடிப்படையில் ஆட்களை நியமித்து அரசு போக்குவரத்து கழகத்துக்கு செலவீனத்தை அதகரித்துள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் என் .சதீஷ்குமார், எம்.ஜோதிராமன் அமர்வு விசாரித்தது. மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் பிரபு ராஜதுரை, வழக்கறிஞர் ஏ.ராகுல் வாதிடுகையில், இந்த மனு முந்தைய அதிமுக அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டாலும், இந்த ஆட்சியிலும் அதே நிலைமை தொடர்கிறது.

கடந்த ஆண்டு மே 15ல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் அளிக்கப்பட்ட தகவலில் 264 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நிர்வாகப் பணியில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆளும் கட்சி சார்ந்த தொழிற்சங்கத்தினர் வேலை செய்யாமல் சம்பளம் பெறுகின்றனர் என்றனர்.

காலியிடங்கள் இருப்பதால்..

போக்குவரத்துக் கழகம் சார்பில், நிர்வாகப் பிரிவில் உதவியாளர் பதவியில் சில காலியிடங்கள் இருப்பதால், தகுதி வாய்ந்த ஓட்டுநர்கள், நடத்துநர்கள் இளநிலை உதவியாளர் பணிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர்.

இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டதும் அந்த ஓட்டுநர்கள், நடத்துநர்கள் அவர்கள் பணிக்கு திரும்ப அனுப்பப்படுவர். அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநர், நடத்துநர்கள் இனிமேல் வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: ஓட்டுநர், நடத்துநர்களை வேறு பணியில் ஈடுபடுத்தக் கூடாது என அரசாணையில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களுக்கு வேறு பணிகள் வழங்கப்பட்டுள்ளன. பணியின் போது அவர்கள் ஊனமுற்றால், அவர்கள் பணி செய்யத் தகுதியற்றவர்கள் எனக் கண்டறியப்பட்டால் தவிர அவர்களை வேறு எந்தப் பணியிலும் நியமிக்கக் கூடாது.

எனவே ஓட்டுநர், நடத்துநர்கள் பணி தொடர்பான அரசாணையை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் ஆளும் கட்சியுடன் இணைக்கப்பட்ட எந்த வொரு தொழிற்சங்கத்தையும் சேர்ந்த ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு இனிமேல் மாற்றுப்பணி என்ற பெயரில் நிர்வாகப் பணி வழங்கக் கூடாது.

இந்த உத்தரவை மீறினால் அவமதிப்பு மனு தாக்கல் செய்ய தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு உரிமை வழங்கப்படுகிறது. இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.



# புதுச்சேரி அரசின் அதிரடி நலத்திட்டம் இஸ்கூட்டர் முதல் வீடு கட்டும் நிதி வரை

புதுச்சேரி, மார்ச். 8-

புதுச்சேரி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. துணைநிலை ஆளுநர் ரி. கைலாஷ்நாதன் மற்றும் முதலமைச்சர் ந. ரங்கசாமி ஆகியோர் தலைமை தாங்கி நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்தனர்.

*இஆட்டோ மானியம்:* சுயதொழிலைப் பெருக்க, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மின்சார மூன்று சக்கர வாகன மானியத் திட்டம் அறிமுகம். *மின்சார ஸ்கூட்டர்:* மாணவியர் மற்றும் பெண்களின் பயணத்தை எளிதாக்க, 'புதுமைப் பெண் திட்டத்தின்' கீழ் இருசக்கர வாகன மானியம் வழங்கப்பட்டது. *வீடு கட்டும் மானியம்:* பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்தின் (றிவிகிசீ2.0) கீழ், மானியத் தொகை 7 இலட்சமாக உயர்த்தப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

*மனைப்பட்டா:* வீடற்ற ஏழை மக்களுக்கு அரசு சார்பில் இலவச மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. விளிம்பு நிலை மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இத்திட்டங்கள் பெரிதும் உதவும் என முதலமைச்சர் தெரிவித்தார். பயனாளிகள் பலரும் திரளாகக் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# தமிழகத்தில் திமுக.. புதுவையில் காங்கிரஸ்! கூட்டணி தலைமையைத் தெளிவுபடுத்திய கிரீஷ் சோடங்கர்

புதுச்சேரி, மார்ச்.8-

புதுச்சேரியில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரீஷ் சோடங்கர், கூட்டணியின் நிலைப்பாடு குறித்து அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டார்.

தமிழகத்தில் திமுக தலைமையில் கூட்டணி அமைவது போல, புதுச்சேரியில் காங்கிரஸ் தலைமையிலேயே 'இந்தியா' கூட்டணி தேர்தலைச் சந்திக்கும் என அவர் உறுதிபடத் தெரிவித்தார். எந்தெந்த தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடுவது என்பது குறித்து திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்த, மாநிலத் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணியின் வெற்றிக்காக எங்களுக்குள் சில இடங்களைத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம்" என்று கிரீஷ் சோடங்கர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். கூட்டணி மற்றும் தொகுதிப் பங்கீடு குறித்த இறுதி முடிவுகள் சென்னையில் உள்ள திமுக தலைமையுடன் ஆலோசித்து விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோவிலில் நடைபெற்ற சனிப்பெயர்ச்சி விழாவில், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, உடுமலை நகர மன்ற தலைவர் மதீன் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் ஏ கணேஷ் மூர்த்தி, செயல் அலுவலர் சுந்தரவடிவேல் சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்திருந்தனர். நிகழ்ச்சியில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் மற்றும் கோயில் ஊழியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். பொது மக்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.




■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், கோடை மழை அம்பேத்கர் அமைப்புசாரா கட்டுமான தொழிலாளர் நல உரிமை சங்கம் மற்றும் பெண்கள் சுய உதவி குழுக்கள் சார்பாக பெண்கள் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் முன்னதாக ஏரிச்சாலை முதல் அண்ணாசாலை வழியாக ஆதித்தனார் திருமண மண்டபம் வரை பேரணி நடைபெற்றது. பேரணியில் பெண்களுக்கு எதிரான குற்றங்களை பற்றியும் குற்றங்களுக்கு தீர்வு காண்பது பற்றியும் கோஷங்கள் எழுப்பப்பட்டது. இறுதியாக மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கொடைக்கானல் மகளிர் காவல் ஆய்வாளர் வசந்தா, அருட் சகோதரிகள் மற்றும் பலர் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பது குறித்து சிறப்புரையாற்றினார்கள். இதில் 500க்கும் மேற்பட்ட பெண்கள். பங்கேற்று கூட்டத்தை சிறப்பித்தனர்.

# மதுரை-கொல்லம் 4 வழிச்சாலை: வடுகபட்டி- ராஜபாளையம் இடையிலான 36 கி.மீ. சாலை ஏப்ரலில் திறப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர். மார்ச்.8-

மதுரைகொல்லம் நான்கு வழிச் சாலை திட்டத்தில் வடுகப்பட்டி ராஜபாளையம் இடையேயான 35.6 கிலோ மீட்டர் சாலை ஏப்ரலில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படுகிறது. இவ்வழித்தடத்தில் விபத்துகளை தவிர்க்கும் வகையில் சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாமல் அமைக்கப்படுவதாக தேசிய நெடுஞ் சாலை ஆணைய அதிகாரிகள் தெரி வித்தனர்.

மதுரை கொல்லம் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாக (என்.ஹெச்744) தரம் உயர்த்த 2022 ஜனவரியில் அரசாணை வெளியிடப்பட்டது. முதற்கட்டமாக திருமங்கலம்ராஜபாளையம் இடையே 71.6 கிலோ மீட்டர் தொலைவுக்கு நான்கு வழிச்சாலை அமைக்க ரூ.1,318 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 2023 மார்ச் மாதம் பணிகள் தொடங்கியது.

இதில் திருமங்கலம் வடுகப்பட்டி (36 கி.மீ), வடுகபட்டி ராஜபாளையம் (35.6 கி.மீ) 2 பிரிவுகளாக பிரித்து பணிகள் நடைபெற்று வருகிறது. வடுகப்பட்டி ராஜபாளையம் பிரிவில்



கிருஷ்ணன்கோவில் வரை தற்போதைய சாலையே நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

கிருஷ்ணன்கோவில் ராஜபாளையம் இடையே 27 கிலோ மீட்டர் தொலைவுக்கு புதிதாக நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 2 ரயில்வே மேம்பாலங்கள், 1 மேம்பாலம், 19 பாலங்கள், சிறிய வாகனங்கள் மற்றும் மக்கள் செல்லும் வகையில் 16 சுரங்கப்பாதை, 62 நீர்வழிப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த சாலையில் நத்தம்பட்டியில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. சாலை அமைக்கும் பணிகள் 99.7 சதவீதம் முடிவடைந்த நிலையில், ஏப்ரல் மாதம் வடுகப்பட்டி ராஜபாளையம் இடையேயான நான்கு வழிச்சாலை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணைய நாகர்கோவில் மண்டல திட்ட இயக்குநர் சச்சின் குமார் மிஸ்ரா கூறியதாவது: மதுரைகொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் தொடர் விபத்துகள் ஏற்படும் அதிக கரும்புள்ளி பகுதிகள் உள்ள நிலையில், நான்கு வழிச் சாலையில் விபத்துகளை தவிர்க்கும் வகையில் சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாமல், ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு கண்காணிப்பு கேமரா அமைத்து நவீன போக்குவரத்து மேலாண்மை அமைப்பு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்த அமைப்பு டோல்கேட்டில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும். இதன்மூலம் விபத்து ஏற்பட்டால் தேவையான அனைத்து உதவிகளும் உடனடியாக மேற்கொள்ளப்படும். இந்த சாலையில் உள்ள அனைத்து குறுக்கு சாலைகளிலும் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை கொல்லம் நான்கு வழிச்சாலையில் நவீன போக்குவரத்து மேலாண்மை அமைப்பு கட்டுப்பாட்டு அறை.

மதுரை கொல்லம் நான்கு வழிச்சாலையில் நவீன போக்குவரத்து மேலாண்மை அமைப்பு கட்டுப்பாட்டு அறை.

சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாததால் 2 கிலோ மீட்டருக்கு ஒரு குறுக்கு பாலம் அமைக்கப்பட்டு உள்ளது. ராஜபாளையம் அருகே எஸ்.ராமலிங்காபுரம் பகுதியில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

ஓராண்டுக்கு முன்னரே முடிய வேண்டிய பணிகள், ரயில்வே மேம்பால அனுமதி தாமதத்தால்தாமதம் ஆகிவிட்டது. நத்தம்பட்டி டோல்கேட் ஏப்ரலில் திறக்கப்பட்டு, சாலை முழுமையாக பயன்பாட்டுக்கு வரும் வரை குறைவான கட்டணம் வசூல் செய்யப்படும். கட்டணம் குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

இந்த சாலையில் 8 இடங்களில் சாலையின் அனைத்து தகவல்கள், உதவி எண்கள் அடங்கிய கியூஆர் கோடு வைக்கப்பட உள்ளது. சாலையில் பாலம் மற்றும் அணுகுசாலை உள்ள பகுதியில் 16 கி.மீ. தொலைவுக்கு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் சோதனை முயற்சியாக 2 கிலோ மீட்டருக்கு பிளாஸ்டிக் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 15ல் இந்த சாலை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். திருமங்கலம்வடுகபட்டி இடையேயான சாலை ஜூன் மாதம் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

இந்த சாலையில் அதிகபட்சமாக 100 கிலோ மீட்டர் வேகம் வரை பயணிக்கலாம். இந்த சாலை முழுமையாக பயன்பாட்டுக்கு வந்தால் மதுரைராஜபாளையம் பயண நேரம் 1 மணி நேரமாக குறையும். அடுத்த கட்டமாக ராஜபாளையம் புளியரை இடையே 70 கி.மீ. தொலைவுக்கு நான்குவழிச்சாலை அமைக்கும் பணிகள் ஓராண்டுக்குள் தொடங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# 'ஈரானில் ஒரு வாரத்தில் 3,000+ இலக்குகளை தாக்கியுள்ளோம்' அமெரிக்க ராணுவம் தகவல்

வாஷிங்டன், மார்ச்.8-

கடந்த வாரத்தில் ஈரானில் உள்ள 3000+ இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பதை அமெரிக்க ராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ராணுவம் தரப்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், 'ஆபரேஷன் எபிக் ஃப்யூரி'யின் மூலம் முதல் வாரத்தில் அமெரிக்கப் படைகள் 3,000க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கியுள்ளன. நாங்கள் எங்கள் வேகத்தைக் குறைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், "நிபந்தனையற்ற சரணடைதலைத் தவிர ஈரானுடன் எந்த ஒப்பந்தமும் இருக்காது. எந்தவொரு ராஜதந்திர பேச்சுவார்த்தைகளும் தொடரும் முன் ஈரான் சரணடைய வேண்டும். அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகள், குறிப்பாக



இஸ்ரேலும், ஈரான் நாட்டின் தலைமை முழுமையாக மாற்றப்பட்டு சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து பரிசீலிப்போம்" என்று ட்ரூத் சமூக வலைதளத்தில் வலியுறுத்தினார்.

மேலும், "ஈரானில் ஒரு சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, நாங்களும், எங்கள் துணிச்சலான கூட்டாளிகளும், ஈரானை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டெடுக்க அயராது பாடுபடுவோம். இது பொருளாதார ரீதியாக முன்பை விட பெரியதாகவும், சிறந்ததாகவும், வலிமையாகவும் ஈரானை மாற்றும். ஈரான் ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கொண்டிருக்கும். 'ஈரானை மீண்டும் பெரியதாக்குங்கள் (விமிநிகி!)" என்று அவரது பதிவில் கூறப்பட்டுள்ளது.



# சென்னையில் தூய்மை பணியாளர்களுக்கு மோர் வழங்கும் திட்டம் : மேயர் பிரியா தொடக்கி வைத்தார்

சென்னை, மார்ச்.8-

மேயரின் 20262027 நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக் காலங்களில் வெயிலின் தாக்கத்திலிருந்து தூய்மைப் பணியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 29,461 பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டத்தை மேயர் ஆர்.பிரியா இன்று தொடங்கி வைத்தார். இத்திட்டம் மூலம் அனைத்து மண்டலங்களிலும் பணிபுரியும் 29,161 மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 09.03.2026 அன்று முதல் ஆவின் மோர் வழங்கப்படவுள்ளது.

# சிவகங்கை மாவட்டத்தில் 34 வழக்குகளில் தேடப்பட்ட ரவுடியை சுட்டுப் பிடித்தது காவல் துறை

சிவகங்கை, மார்ச்.8-

சிவகங்கை மாவட்டத்தில் 34 வழக்குகளில் தேடப்பட்ட ரவுடியை சுட்டுப் பிடித்தது காவல் துறை. மிக்கேல் பட்டினத்தைச் சேர்ந்த ஊர்க்காவலன் என்பவரை நீதிமன்ற உத்தரவுப்படி போலீசார் பிடிக்க முயன்றபோது தப்பிக்க முயற்சி செய்ததால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. வலது காலில் குண்டு பாய்ந்த நிலையில் ஊர்க்காவலன் சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இந்தியப் பெருங்கடலில் ஈரானிய கப்பல்களை தாக்குவது ஏன்? அமெரிக்காவிடம் இந்தியா கேட்க ஈரான் வலியுறுத்தல்

புதுடெல்லி, மார்ச். 8-

இந்திய பெருங்கடலில் ஈரானிய கப்பல்களை அமெரிக்கா தாக்குவது ஏன் என்று இந்தியா கேட்க வேண்டுமென்று ஈரான் வெளியுறவுத் துறையின் துணை அமைச்சர் சயீத் கதிப்சாதே தெரி வித்துள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்ற ரெய்சினா மாநாட்டில் பங்கேற்ற அவர், 'தி இந்து' ஆங்கில நாளிதழிடம் கூறியதாவது: "ஈரான் அச்சுறுத்தலாக விளங்குகிறது என்ற ஒரு பொய்யின் அடிப்படையில் அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்குதலை தொடங்கின. 'கிரேட்டர் இஸ்ரேல்' என்ற போலி பிம்பத்தை கட்டமைக்கவே இந்த



போர் நடைபெறுகிறது. இதை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரே வழி பேச்சுவார்த்தைதான்.

ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கவில்லை. இந்தியாவுக்கு வரும் கப்பல்களை நாங்கள் மறிக்கவில்லை. ஈரான் தனது பொறுப்புகளை நன்கு அறியும். அந்த வகையில் ஹார்முஸ் ஜலசந்தியின் நிலைத்தன்மையை செம்மைப்படுத்தும் நங்கூரமாக ஈரான் செயல்படுகிறது.இப்படி இருக்கும் சூழலில் இந்திய பெருங்கடலில் ஈரானிய கப்பல்களை தாக்குவது ஏன் என்று அமெரிக்காவிடம் இந்தியா கேட்க வேண்டும். ஏனெனில், அமெரிக்காதான் அச்சுறுத்தலாக விளங்குகிறது" என்று சயீத் கதிப்சாதே தெரிவித்தார்.

கொச்சியில் ஈரான் கப்பல்: மத்திய கிழக்கில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் ஈரான் போர்க்கப்பல் ஒன்றுக்கு இந்தியா புகலிடம் அளித்துள்ளது.இலங்கை அருகே ஈரானின் 'ஐஆர்ஐஎஸ் தேனா' போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் தகர்க்கப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பாகவே, மற்றொரு ஈரான் போர்க்கப்பலான 'ஐஆர்ஐஎஸ் லாவன்' கொச்சி துறைமுகத்திற்கு வந்தடைந்தது.

சர்வதேசக் கடற்படை அணிவகுப்பில் பங்கேற்பதற்காக இப்பகுதிக்கு வந்திருந்த இந்தக் கப்பலில் திடீர் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், பிப்ரவரி 28 அன்று ஈரான் தரப்பிலிருந்து அவசரக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்திய அரசு இதற்கு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, மார்ச் 4 அன்று அந்தக் கப்பல் கொச்சியில் நிலைநிறுத்தப்பட்டது. தற்போது 'ஐஆர்ஐஎஸ் லாவன்' கப்பலில் இருந்த 183 ஈரான் கடற்படை வீரர்கள் கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படை முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



# 20 ஆண்டுகள் களத்தில் சிங்கமாய்.. பாசத்தில் பிள்ளையாய் வீரக் காளைக்கு கிராம மக்கள் கண்ணீர் அஞ்சலி

அலங்காநல்லூர், மார்ச் 8-

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில், கடந்த 20 ஆண்டுகளாக தங்கள் வீட்டுப் பிள்ளையாகப் போற்றி வளர்த்து வந்த ஜல்லிக்கட்டு காளை உயிரிழந்தது. சுற்றுவட்டார கிராமத்து மக்களும், அரசியல் பிரமுகர்களும் நேரில் வந்து அந்த வீரக் காளைக்கு இறுதி மரியாதை செலுத்தினர். “எங்கள் கிராமத்தின் அடையாளமாகத் திகழ்ந்த வீரத்தின் சின்னத்தை இழந்துவிட்டோம்” எனப் பொதுமக்கள் கண்ணீர் மல்கக் கூறினர்.

அந்தக் காளை கன்றாக இருந்த காலத்திலிருந்தே கிராம மக்கள் ஒரு குடும்ப உறுப்பினராக வளர்த்து வந்தனர். அலங்காநல்லூர், பாலமேடு முதல் திருச்சி, தஞ்சை, திருப்பூர், கோயம்புத்தூர் எனப் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு, வடமாடு மஞ்சுவிரட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு எண்ணற்ற வெற்றிகளையும், பரிசுகளையும் குவித்த பெருமை இக்காளைக்கு உண்டு. களத்தில் சீறிய இந்த வீரக் காளை, கிராமத்து மக்களிடம் மட்டும் மிகுந்த சாந்தத்துடனும், அன்போடும் பழகி வந்துள்ளது.

காளையின் மறைவை வெறும் விலங்கின் இறப்பாகப் பார்க்காமல், தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்ததாகக் கருதி, விடிய விடிய மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். பந்தல் அமைத்து, கரகாட்டம், மேளதாளங்கள் முழங்க, வானவேடிக்கையுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று, மாலை அப்பகுதியில் நல்லடக்கம் செய்தனர்.




# சூப்பர் மாம் 2026 திருவிழா!” மேடையில் அதிரடி காட்டிய திசையன்விளை அம்மாக்கள்

திசையன்விளை, மார்ச்.8-

திசையன்விளை ஜெயர்ராஜேஸ் வித்யா மந்திரி மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடைபெற்ற “சூப்பர் மாம் 2026” (Super Mom 2026) கலைத்திருவிழா, பாசத்தின் சங்கமமாக அமைந்தது. குழந்தைகளின் உலகத்தை அம்மாக்களின் திறமைகளோடு இணைக்கும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி, பார்வையாளர்களுக்குப் பெரும் விருந்தாக அமைந்தது.*நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்:*நடனம், சிலம்பம் மற்றும் ரேம்ப் வாக் என மேடையையே அதிரவைத்த அம்மாக்கள், தங்கள் பன்முகத் திறமையை வெளிப்படுத்தினர். கண்களைக் கட்டித் தங்கள் குழந்தையைக் கண்டுபிடிக்கும் போட்டியில், பாசத்தின் பிணைப்பு அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பாகச் செயல்பட்டவர்களுக்குப் பெருமையுடன் “சூப்பர் மாம்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பள்ளி ஆசிரியர்களின் சிறப்பான திட்டமிடலில், அம்மாக்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே இருந்த பிணைப்பை இன்னும் வலுப்படுத்தும் வகையில் இந்த விழா மிக நேர்த்தியாக நடைபெற்றது.

தங்கள் குழந்தைகளின் பள்ளியில் இத்தகைய ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று பெற்றோர்கள் ஆர்வமுடன் கோரிக்கை விடுத்தனர்.

# நம்மைச் சுற்றியுள்ள பெண்களைக் கொண்டாடுவோம்! கந்தர்வகோட்டை பள்ளியில் மகளிர் தின விழா

புதுக்கோட்டை, மார்ச்.8-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், ‘மகிழ்முற்றம்’ சார்பில் “நம்மைச் சுற்றியுள்ள பெண்களைக் கொண்டாடுவோம்” எனும் தலைப்பில் சர்வதேச மகளிர் தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்க, ஆசிரியை செல்விஜாய் முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் கந்தர்வகோட்டை ஒன்றியத் தலைவரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியருமான ரகமதுல்லா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய ரகமதுல்லா, “1900களின் தொடக்கத்தில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உழைக்கும் பெண்களின் உரிமைகளுக்காகத் தொடங்கப்பட்ட போராட்டங்களின் விளைவாகவே இந்த நாள் உருவானது. பெண்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், 1977ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது” என்று குறிப்பிட்டார்.



இந்த ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் கருப்பொருளான “உரிமைகள், நீதி, நடவடிக்கை அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக” என்பதன் அவசியத்தை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எடுத்துரைத்தார். நிறைவாக, ஆசிரியை சிந்தியா நன்றி தெரிவித்தார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அப்பகுதிப் பெண்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# உடுமலையில் 711 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா “மீண்டும் ஸ்டாலின் தான் முதல்வர்!” அமைச்சர் சூளுரை

திருப்பூர், மார்ச்.8-

திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்ற தொகுதி. மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊராட்சியில் வசிக்கும் ஏழை, ஏளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் நிகழ்ச்சி, பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி தலைமையில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் மடத்துக்குளம் வட்டம், உடுமலை வட்டம் பகுதி 711 பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசும்பொழுது 3.50 லட்சத்தில் கலைஞர் கனவு இல்ல திட்டம், மேலும் இத்திட்டத்தில் அதிக பயணிகள் சேர்க்கப்படுவார்கள். பட்டா வழங்கப்பட்ட இடத்தின் மதிப்பு 5 கோடியே 65 லட்சம் மதிப்பில் விலையில்லாத இடம் வழங்கி கலைஞர் கனவு இல்லம் கட்டித் தரப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் அதிக பயனாளிகள் சேர்க்கப்படுவார்கள் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் ஜெயராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ராஜமாணிக்கம், மெய்ஞானமூர்த்தி, பனத்தம்பட்டி தங்கராஜ் செந்தில்குமார், மாரிமுத்து, பாபு. சாகுல் அமீர், கவிதாகிரி, பொதுகுழு உறுப்பினர் ஈஸ்வரசாமி, உடுமலை நகரமன்ற தலைவர் மத்தீன், உடுமலை நகர கழக செயலாளர் வேலுசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம்பிரசாத் மற்றும் மாவட்ட வருவாய் துறை அதிகாரி, உடுமலை, மடத்துக்குளம் தாசில்தார், வருவாய்த் துறை அதிகாரிகள், மடத்துக்குளம், உடுமலை பகுதி பயனாளிகள் கலந்து கொண்டார்கள்.



■ குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.கமல்கிஷோர் பெண்கல்வி, பெண் முன்னேற்றம் போன்ற தலைப்பில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

# ஈரான் போர் கப்பலில் இருந்து 208 வீரர்களை மீட்ட இலங்கை கடற்படை

ராமேசுவரம், மார்ச்.8-

அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்ற பதற்றமான சூழலில், ஈரானுக்கு சொந்தமான 2வது போர் கப்பலான ‘ஐரிஸ் புஷேர்’ல் இருந்து 208 ஈரான் நாட்டு வீரர்களை இலங்கை கடற்படை மீட்டுள்ளது. இதுகுறித்து இலங்கை அதிபர் அநுர குமார திசநாயகே கூறும்போது, இது மனிதாபிமான நடவடிக்கை என தெரிவித்துள்ளார்.

ஐஆர்ஐஎஸ் டேனா இந்தியாவில் கூட்டுப் பயிற்சியை முடித்துவிட்டு, ஈரான் திரும்பிய ஐஆர்ஐஎஸ் டேனா என்ற போர்க் கப்பலை, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் மார்க்48 என்ற சக்தி வாய்ந்த டார்பிடோ குண்டு மூலம் கடந்த சனிக்கிழமை தகர்த்தது.

இதில் 87 வீரர்கள் உயிரிழந்தனர். இந்த தாக்குதலை தொடர்ந்து ஈரான் போர்க் கப்பல் ஐஆர் ஐஎஸ் டேனாவில் இருந்து, அவசர உதவி கோரி கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு தகவல் அனுப்பப் பட்டது.

இலங்கையின் காலே பகுதியில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் ஈரான் போர்க்கப்பல் கடலில் மூழ்கியது. இது இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதி ஆகும்.



இதுகுறித்து இலங்கைக்கு தகவல் கிடைத்ததும் அந்நாட்டு கடற்படையும், விமானப் படையும் உடனடியாக மீட்புப் பணியில் களமிறங்கின. இதில் 32 பேரை உயிருடன் மீட்டதுடன், 84 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன.

இந்நிலையில் ஈரானின் 2வது போர்க் கப்பலான ‘ஐரிஸ் புஷேர்’, 200க்கும் மேற்பட்ட வீரர்களுடன், இலங்கை கடற்பகுதி அருகே சென்று கொண்டிருந்தது. இந்தக் கப்பல் மீதும் அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம் என்ற பதற்றமான சூழலில், போர்க் கப்பலை பாதுகாப்பாக இலங்கை கடல் எல்லைக்குள் அனுமதிக்குமாறு அந்நாட்டு அரசிடம் ஈரான் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து இலங்கை அதிபர் அநுர குமார திசநாயகே உயர்மட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, அதில் எடுக்கப்பட்ட முடிவின்படி, ‘ஐரிஸ் புஷேர்’ போர்க் கப்பல் கிழக்கு திரிகோணமலை துறைமுகத்துக்கு திருப்பிவிடப்பட்டு, அதில் இருந்த 208 வீரர்களை இலங்கை கடற்படையினர் மீட்டு, தலைநகர் கொழும்பு நகருக்கு அழைத்து வந்தனர்.

இந்தக் கப்பலில், 53 அதிகாரிகள், 84 கேடட்கள், 48 மூத்த கடற்படை வீரர்கள் மற்றும் 23 கடற்படை வீரர்கள் என 208 பேர் இருந்ததாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. மேலும், கப்பலில் மீட்கப்பட்ட 208 ஈரானிய கடற்படையினர் வெலிசற கடற்படை முகாமில் பாதுகாப்பாக தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை குறித்து இலங்கை அதிபர் அநுர குமார திசநாயகே கூறும்போது, 2 ஈரான் நாட்டுக் போர்க் கப்பல்கள் தொடர்பான பிரச்சினையில் நாம் நடுநிலையையே பின்பற்றியுள்ளோம். மனிதாபிமானத்துக்கு முதன்மை அளித்துள்ளோம் என்று தெரிவித்தார்

# “விஜய் இரண்டாம் இடம் வர வாய்ப்பு” காங். எம்.பி. ஜோதிமணி கணிப்பு

கரூர், மார்ச்.8-

“இளைஞர்கள் ஆதரவு அதிகமாக இருக்கக் கூடிய தவெக தலைவர் விஜய் நிச்சயமாக 2வது இடத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது” என கரூர் எம்.பி. ஜோதிமணி தெரிவித்தார்.

கரூரில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி மாற்றம் செய்யப்பட்டுள்ளது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. இண்டியா கூட்டணியின் தமிழகத்துக்கான நட்சத்திர பேச்சாளராக இருந்தார். ஆளுநர் மாளிகையை, பாஜகவின் தலைமை அலுவலகமாக செயல்பட வைத்தார். அவரை மேற்கு வங்க ஆளுநராக மாற்றியதற்காக அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி கவலைப்படத் தேவையில்லை. அங்கும் மம்தா பானர்ஜிக்கு நட்சத்திர பேச்சாளராக ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்படுவார்.

தமிழகத்தில் பாஜக கூட்டணி இந்தத் தேர்தலில் 3வது இடத்துக்குச் செல்லும். பிஹாரில் கூட்டணிக் கட்சியை பாஜக கபளீகரம் செய்து பதவிக்கு வருகிறது. அதேபோல தமிழகத்திலும் அதிமுக என்ற கட்சிக்கு கடைசித் தேர்தலாக இது இருக்கும். அதேவேளையில், இளைஞர்கள் ஆதரவு அதிகமாக இருக்கக் கூடிய தவெக தலைவர் விஜய் நிச்சயமாக 2வது இடத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது” என்றார்.




# திருப்பூர் தெற்கு தொகுதியில் வளர்ச்சித் திட்டங்கள் செல்வராஜ் எம்.எல்.ஏ. அடிக்கல்

திருப்பூர், மார்ச்.8-

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், சுமார் ரூபாய் 3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில், மத்திய மாவட்ட திமுக செயலாளரும், தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க. செல்வராஜ் எம்.எல்.ஏ., கொங்கணகிரி பகுதியில் இந்தத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார். புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு எம்.எல்.ஏ. அவர்கள் முறைப்படி அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் டி.கே.டி. மு. நாகராஜ், மண்டலத் தலைவர் உமா மகேஸ்வரி, பகுதிச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆறுமுகம், சுப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், கவுன்சிலர் திவாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சலீம் பாய் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர். திருப்பூர் தெற்கு தொகுதியை ஒரு முன்மாதிரி தொகுதியாக மாற்றும் நோக்கில் இத்தகைய வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என எம்.எல்.ஏ. செல்வராஜ் தெரிவித்தார்.

# சின்னாளப்பட்டியில் இருந்து டெல்லி நோக்கி! ‘நான் முதல்வன்’ திட்டத்தால் ஐ.ஏ.எஸ். ஆனார் அரசுப் பள்ளி மாணவர்

சின்னாளப்பட்டி, மார்ச்.8-

தமிழக அரசின் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயின்று, ஐ.ஏ.எஸ். (IAS) தேர்வில் தேசிய அளவில் 213வது இடத்தையும், தமிழக அளவில் 7வது இடத்தையும் பிடித்து சின்னாளப்பட்டிக்கு பெருமை சேர்த்துள்ளார் மாணவர் அருண்பாண்டியன் (26).

*சாதனைப் பயணம்:*

ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர் நடராஜன் தமிழ்ச்செல்வி தம்பதியினரின் மகனான அருண்பாண்டியன், பள்ளிப் பருவம் முதலே படிப்பில் சிறந்து விளங்கினார். 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் 2ம் இடம் பிடித்து, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களாலேயே பாராட்டி ஊக்குவிக்கப்பட்டவர். சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்ற இவர், ஐ.ஏ.எஸ். கனவை நனவாக்க தமிழக அரசின் குடிமைப் பணிப் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயின்றார்.



* நன்றியுடன் அருண்பாண்டியன்:*

வெற்றி குறித்துப் பேசிய அருண்பாண்டியன், "எனது வெற்றிக்கு தமிழக அரசின் ‘நான் முதல்வன்’ திட்டம் பெரும் துணையாக இருந்தது. ஐ.ஏ.எஸ். பயிற்சிக்காக அரசு மாதம் தோறும் வழங்கிய ரூ. 25,000 ஊக்கத்தொகை என் போன்ற மாணவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதாரப் பலத்தை அளித்தது. இதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று உணர்ச்சியுடன் தெரிவித்தார்.

மருத்துவர்களாக உள்ள அருண்பாண்டியனின் சகோதரிகள் திலகவதி மற்றும் ரோகிணி கூறுகையில், "எங்கள் தந்தை இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின், சிரமம் பாராமல் எங்களது படிப்பில் கவனம் செலுத்தி எங்களைச் சாதனையாளர்களாக்கினார். பெற்றோர்கள் பிள்ளைகள் மீது நம்பிக்கை வைத்தால், எந்த இலக்கையும் எட்ட முடியும்" என்று பெருமிதத்துடன் கூறினர். அருண்பாண்டியன் பயின்ற தம்பித்தோட்டம் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், இனிப்புகள் வழங்கி மாணவரின் வெற்றியை உற்சாகமாகக் கொண்டாடினர்.

## நாங்குநேரி இரட்டைக் கொலையில் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம்: அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க நீதிமன்றம் உத்தரவு



மதுரை, மார்ச்.8-

நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நடைபெற்ற இரட்டை கொலை வழக்கில் கைது எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது. இச்சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்யக்கோரி, 4வது நாளாக உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாங்குநேரி அருகே கடந்த 2ம் தேதி ஒரு கும்பல் சரமாரியாக அரிவாளால் வெட்டியதில், ஒடிசா தொழிலாளி திரிநாத் கட்டா மற்றும் பெரும்பத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி ஜான் ஆகிய 2 பேர் கொலை செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக, 7 பேரை போலீஸார் கைது செய்தனர். இந்நிலையில், மஞ்சங்குளம் மகாராஜன் என்பவர் நேற்று கைது செய்யப்பட்டார். இதனால், இச்சம்பவத்தில் கைதானவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது. மேலும் சிலரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தை கண்டித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வழக்கில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்யும் வரை, உடலை வாங்க மறுத்து நேற்று 4வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதே வேளையில் ஒடிசா தொழிலாளி திரிநாத் கட்டாவின் உடல் ஏற்கெனவே அடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. நீதிமன்றத்தில் முறையீடு இதனிடையே நாங்குநேரி சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வில் வழக்கறிஞர் ஆயிரம் கே.செல்வகுமார் ஆஜராகி, எந்தக் காரணமும் இல்லாமல் கொலை செய்யப்பட்ட புலம் பெயர்ந்த தொழிலாளியின் குடும்பத்துக்குத் தேவையான நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும், கொலையாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் உயர் நீதிமன்றம் தாமாக முன் வந்து வழக்குப் பதிந்து விசாரிக்க வேண்டும் எனக் கோரினார்.

பின்னர் நீதிபதிகள், நாங்குநேரி விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு தொடர்பாக தகவல் பெற்று நீதிமன்றத்துக்குத் தெரிவிக்க அரசு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டனர்.

## மாநில அளவிலான தொழில்நுட்பப் போட்டியில் அசத்திய புளியங்குடி மாணவி எஸ். வீரசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரிக்கு பெருமை




புளியங்குடி, மார்ச் 8-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் உள்ள எஸ். வீரசாமி செட்டியார் பொறியியல் கல்லூரியில், மாநில அளவிலான தொழில்நுட்பப் படைப்புகளை ஆய்வு செய்யும் பிரம்மாண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் தங்களது நவீன கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தினர்.

சாதனைத் திட்டம்:

இந்த நிகழ்ச்சியில் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்பத் திட்டங்களை, 'கொற்றவை' நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி காருண்யா கணபதி தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்தனர். இதில், எஸ். வீரசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் கணிப்பொறித் துறையில் மூன்றாம் ஆண்டு பயின்று வரும் மாணவி ஆதிலா, தனது தனித்துவமான தொழில்நுட்பத் திட்டத்திற்காக மாநில அளவில் இரண்டாம் பரிசு பெற்று சாதனை படைத்துள்ளார்.

வெற்றி பெற்ற மாணவி ஆதிலாவிற்கு, கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் வீ. முருகையா, செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி, முதல்வர் இசக்கி முத்து, வளர்ச்சி இயக்குனர் டாக்டர் ஜமால் முகமது ஜுபேர் மற்றும் மேலாளர் தங்கப்பன் பிள்ளை ஆகியோர் நேரில் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மேலும், துறைத் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவியின் இந்த அபார சாதனையைப் பாராட்டி வருகின்றனர்.

## மகளிர் தினம் கொண்டாடும் தவெக தலைவர் விஜய்... மன உளைச்சலில் மனைவி சங்கீதா




சென்னை, மார்ச்.8-

விவாகரத்திற்கு பிறகு வேறு வீட்டிற்கு செல்லும் வரை நீலாங்கரை வீட்டில் தங்க விஜய் தன்னை அனுமதிக்க உத்தரவிடக் கோரி செங்கல்பட்டு நீதிமன்றத்தில் சங்கீதா புதிய மனு தாக்கல் செய்துள்ளார். என்னை வீட்டுக்குள் அனுமதிக்க விஜய் மறுப்பதாக சங்கீதா செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். கோடி கோடியாக சம்பாதிக்கும் விஜய் எனக்கும், குழந்தைகளுக்கு நியாயமான ஜீவனாம்சம் வழங்க வேண்டும். ஏற்கெனவே தாக்கல் செய்த விவாகரத்து வழக்கின் மூலம் விஜயிடம் நியாயமான ஜீவனாம்சம் கோரியுள்ளேன். Urban Transitவிவாகரத்து கோரியுள்ளதால் தற்போது சென்னையில் வசிக்க வீடின்றி தவிக்கிறேன். விவாகரத்துக்கு பிறகு வேறு வீட்டுக்கு செல்லும் வரை நீலாங்கரை வீட்டில் இருக்க அனுமதிக்க வேண்டும். பிரிட்டன் குடியுரிமையுடன் லண்டனில் வசித்து வருவதால் சென்னையில் எனக்கு தனியாக வீடு இல்லை. திரிஷாவுடன் விஜய் பொது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நிலையில், சங்கீதா புதிய மனு தாக்கல் செய்துள்ளார். விவாகரத்து முடியும் வரை விஜய் வீட்டில் வசிக்க எனக்கு உரிமை உள்ளது.

விவாகரத்து வழக்கு முடியும் வரை விஜய்யின் நீலாங்கரை இல்லத்தில் அனைத்து உரிமைகள், வசதிகளுடன் வசிக்க உத்தரவிட வேண்டும். நடிகையுடன் கள்ளத்தொடர்பு வைத்துள்ள விஜய், தன்னை தனிமைப்படுத்தி துன்புறுத்துவதாக சங்கீதா கூறியிருந்தார். இதைத்தொடர்ந்து, தமிழ்நாட்டில் ஒரு ஹிட்லர் உருவாகிக் கொண்டு இருக்கிறார் என இயக்குநர் அமீர் பதிவிட்டுள்ளார். மனைவி, மகள் இருவரையும் வீட்டிலிருந்து விரட்டி விட்டு மகளிர் தின விழா எனும் கேவலமான அரசியல் நிகழ்ச்சி. என்று கூறியுள்ளார்.

## தமிழகத்தில் ஜுலை 17 முதல் ஆக.30 வரை டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு



சென்னை, மார்ச்.8-

தமிழகத்தில் ஜுலை 17 முதல் ஆக.30 வரை டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. இதில் 1.20 லட்சம் பணியாளர்கள் 33 கேள்விகளுடன் வீடுவீடாகச் சென்று தரவுகளை சேகரிக்க உள்ளனர்.

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வந்தது. கடைசியாக 2011ம் ஆண்டு நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, 2021ம் ஆண்டு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கரோனா பரவல் காரணமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி தள்ளிவைக்கப்பட்டது.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று நாடு முழுவதும் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என மத்திய அரசு கடந்த ஆண்டு ஜுன் மாதம் அறிவித்தது. அதன்படி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடி, மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 நடத்த ஒப்புதல் வழங்கப்பட்டது.

இப்பணிகள் ரூ.11,718.24 கோடியில் இருகட்டங்களாக நடத்தப்படும் என்றும், முதற்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டு 2026 ஏப்ரலில் தொடங்கி, செப்டம்பர் மாதத்துக்குள் முடிக்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்பணியில் 30 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மத்திய அரசு உத்தரவுப்படி, தமிழகத்தில் நடைபெறும் மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் ஜுலை 17 முதல் ஜுலை 31ம் தேதி வரை மக்கள் சுயமாக மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்களை இணையவழியில் பதிவிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆக.1 முதல் 30ம் தேதிக்குள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணியில் அரசு ஆசிரியர்கள், களப்பணியாளர்கள், மாவட்டம், துணை மாவட்டம் மற்றும் மாநில அளவிலான பிற மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் என சுமார் 1.20 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

தங்கள் வழக்கமான பணிகளுடன் கூடுதலாக மக்கள்தொகை கணக்கெடுப்பின் களப்பணியையும் செய்வார்கள். அதற்காக அவர்களுக்கு மதிப்பூதியமும் வழங்கப்பட உள்ளது.

இந்த கணக்கெடுப்பில், வீட்டுவசதி நிலை, வசதிகள் மற்றும் சொத்துகள், வீட்டு உறுப்பினர்கள் எண்ணிக்கை, மதம், எஸ்சி மற்றும் எஸ்டி, மொழி, எழுத்தறிவு மற்றும் கல்வி, பொருளாதார செயல்பாடு, இடம்பெயர்வு உள்ளிட்ட 33 கேள்விகளுடன் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட உள்ளன. டிஜிட்டல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக, மக்கள்தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (சிஎம்எம்எஸ்)போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கட்டப்பட்டுள்ள உள்ளரங்க இறகுபந்து, கபடி விளையாட்டு மைதானங்களை பார்வையிட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்தயபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



## பல்லடம் கோதாவில் இறங்கும் இல.பத்மநாதன் அமைச்சர்கள் முன்னிலையில் விருப்பமனு தாக்கல்

திருப்பூர், மார்ச்.8-

தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், திருப்பூர் மாவட்ட திமுகவில் தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. முக்கிய நிர்வாகிகளும், மக்கள் பிரதிநிதிகளும் விருப்பமனுக்களை ஆர்வத்துடன் தாக்கல் செய்து வருகின்றனர்.

திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டலத் தலைவருமான இல. பத்மநாதன், பல்லடம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடுவதற்கான தனது விருப்ப மனுவை, திமுக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களிடம் வழங்கினார்.

*அமைச்சர்கள் பங்கேற்பு:*

இந்த நிகழ்வின் போது, திமுக துணைப் பொதுச்செயலாளரும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சருமான மு.பெ. சாமிநாதன், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சருமான திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் உடனிருந்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மேலும், மாவட்ட மற்றும் மாநகர திமுக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர்.

திருப்பூர் மாநகராட்சிப் பணிகளில் சுறுசுறுப்பாக இயங்கி வரும் இல. பத்மநாதன், தற்போது சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதால் பல்லடம் தொகுதி திமுக தொண்டர்களிடையே உற்சாகம் ஏற்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள சரந்தாங்கி கிராமத்தில் அமைந்துள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் திமுக ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், முத்தையன், ஒன்றிய பொருளாளர் சுந்தர், திமுக நிர்வாகி இளமாறன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் காயத்ரி இதயச்சந்திரன், தனுஷ்கோடி, அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி, கிளைச் செயலாளர் சுபாஷ்மதுரைவீரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, மாணவரணி அமைப்பாளர் யோகேஷ், சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி தவசதீஷ், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி ஜெயராம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வானிலை: தமிழகத்தில் வெப்ப நிலை 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு

சென்னை, மார்ச்.8-

தமிழகத்தில் வெப்ப நிலை நாளை (மார்ச் 8) வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (மார்ச் 8) நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டதின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

மார்ச் 9ம் தேதி மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களிலும், 10ம் தேதி தென் தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 11ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 12, 13 தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை, வழக்கத்தை விட ஒரு சில இடங்களில் நாளை 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000